## திருநெல்வேலி சந்தையின் வெற்றிக் கதை:



**திரு. குருசாமி,**

**பி.கே.எஸ் கமிஷன் கடை, *கடை எண்:24,***

**காய்கனி சந்தை,**

**திருநெல்வேலி நகரம்.**

**அலைபேசி:9842115579**

---

என் பெயர் குருசாமி திருநெல்வேலி மொத்த விலை சந்தையில் காய்கறி கமிஷன் கடை நடத்தி வருகிறேன். அனைத்துத் தரப்பான காய்கறி விலைகளை நிர்ணயம் செய்வதில் மொத்த விலைக் காய்கறி விற்பனையாளர் என்ற முறையில் நானும் ஒரு முக்கிய நபர் என்ன தான் அரசாங்க உத்தரவுகள், முறைகள் இருந்தாலும் மொத்த விலை வியாபாரிகளே விலையை நிர்ணயம் செய்வதில் முக்கியமானவர்கள் ஆவர்.

விலையை நிர்ணயிப்பதில் எந்த ஒரு நிர்பந்தமான முறையும் கிடையாது. குறிப்பிட்ட காய்கறிகளின் தரத்தையும, தேவையையும் பொறுத்தே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மிகவும் பழமையான சந்தையின் தச்சநல்லூர் சந்தையைப் பொறுத்தே திருநெல்வேலி சந்தை விலை அமைகிறது.

காய்கறிகளின் விலை நிர்ணயம் செய்வது மிகவும் கஷ்டமான ஒன்றாகும். விலையை நிர்ணயம் செய்யும் போது அருகில் உள்ள சந்தைகளான மதுரை, மற்றும் விருதுநகர் விலை நிலவரங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டி உள்ளது. நாங்கள் மலைக் காய்கறிகளான கேரட், பீட்ரூட், மற்றும் உருளை வகைகளை கொடைக்கானல், உதகை மற்றும் கோயமுத்தூரில் இருந்து பெற்று வருகிறோம். அதனால் மலை காய்கறிகளின் விலையை நிர்ணயம் செய்யும் போது மலை வாழ் நகரங்களின் சந்தை விலைகளையும் கணக்கில் எடுக்க வேண்டி உள்ளது. நடைமுறையில் இது மிகவும் கஷ்டமான காரியமானதால் நாங்கள் அந்த ஊர்களில் உள்ள வியாபாரிகளையே நம்ப வேண்டி உள்ளது.

இந்த சூழ்நிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி மையத்தின் தினசரி சந்தை நிலவரம் என்ற திட்டம் தொடங்கப்பட்டது. என்ன தான் இந்தத் திட்டம் விவசாயிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டாலும் கூட நாங்களும் இதனை

பயன்படுத்திக் கொள்கிறோம். நாங்கள் இதை சந்தை ஆய்வாளர்கள் மூலம் அறிந்த போது நீண்ட காலம் நாங்கள் எதிர்பார்த்து இருந்தால் உண்மையிலேயே மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம்.

இந்தச் சந்தை மாலை 6 மணியில் இருந்து காலை 6 மணி வரை நடந்து கொண்டிருக்கிறது. இரவு வேலைகளில் எங்களுக்கு மற்ற சந்தைகளின் மாலை 4 மணி நிலவரம் தேவைப்படுகிறது. தினசரி சந்தை நிலவரத்தின் மூலம் நாங்கள் தமிழ்நாட்டின் உள்ள பெரிய சந்தைகளின் விலை நிலவரத்தை மதியம் 2 மணிக்குள் பெற முடிகிறது.

இந்தச் சேவை எங்களுக்கும், விவசாயிகளுக்கும் மற்றும் வேறு சந்தை நிலவரங்களின் விலையையும் பொருத்திப் பார்க்கும் விவசாயிகளுக்கும் நல்ல உதவியாக உள்ளது. நாங்களும் விவசாயிகள் நன்மை அடையும் வகையில் நல்ல விலைகளை அளிக்கிறோம். அனைத்து சந்தை நிலவரங்களும் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் கிடைக்கப் பெறுவதால், விவசாயிகளுக்கும்,  வியாபாரிகளுக்கும் நல்ல சமூகமான உறவு ஏற்படுகிறது.

இந்தப் பணியை வழங்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.